**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR THE PROPOSED PROJECT OF COMMON BIO-MEIDCAL WASTE TREATMENT FACILITY BY M/s. S GROWTH ALLIANCES LLP, TO BE LOCATED AT SURVEY NO. 58/1, 58/2, 59/1A (PT), 59/1B (PT) OF MELPAAKAM VILLAGE, UTHIRAMERUR TALUK, KANCHIPURAM DISTRICT ON 23.01.2024 AT 10:30 AM.**

| | | |
|---|---|---|
| **Project name** | : | Common Bio Medical Waste Treatment Facility by M/s. S Growth Alliances LLP |
| **Place** | : | Survey No. 58/1, 58/2, 59/1A (PT), 59/1B (PT)<br>Melpaakam Village,<br>Uthiramerur Taluk,<br>Kanchipuram District |
| **Date and Time** | : | 23.01.2024 at 10:30 AM |
| **participants** | : | 1. Mr. M. Narayanan,<br>Spl District Revenue Officer (L.A)<br>New Green Field Airport<br>Paranthur,<br>Kanchipuram District.<br><br>2. Mr. K. Prakash,<br>District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Sriperumbudur,<br>Kanchipuram District.<br><br>and Public |

At the outset, the District Environment Engineer, Tamil Nadu Pollution Control Board, Sriperumbudur welcomed the District Revenue Officer, Land Acquisition, National Highways, Kancheepuram District, other Government Officials, Public, Social & Environmental activists for the Public Hearing and informed that the Proponent M/s S Growth Alliances LLP has approached the State Level Environmental Impact Assessment Authority-TN seeking Environmental Clearance for the proposed project of Common Bio Medical Waste Treatment Facility to be located at Survey No. 58/1, 58/2, 59/1a (pt), 59/1b (pt) of Melpaakam Village, Uthiramerur Taluk, Kanchipuram District. In this regard, the SEIAA-TN in its letter dt.06.06.2023 has issued Terms of Reference (TOR) subject to one of the condition that the proponent shall prepare an EIA report and also to conduct a Public Hearing among than public

in that area and address the concerns raised during the public hearing to SEIAA-TN. Based on that, the public hearing was arranged on 23.01.2024 and public notices have been issued as mandated in the news paper namely "The New Indian Express" (English) & "Dhinakaran (Tamil)" on 13.12.2023.

Then the DEE, TNPCB informed that on behalf of project proponent, the Project Consultant will make power point presentation about the said proposed project and the public present can express their views, concerns and questions if any by indicating their name and village from where he /she comes from. It was also informed that the proceedings of the entire meeting will be recorded.

After that, the project consultant Thiru. M. Vivek explained about the proposed project through a power point presentation before the public present during public hearing.

The views, concerns, questions and comments of the public and the clarification from the project proponent are detailed below.

| S.No | Name and Village | Comments and requests |
|---|---|---|
| 1 | **Thiru.Balamurugan, Melpaakam Village** | No announcement made to our Melpaakam village through public addressing systems regarding this Public Hearing. We came to this meeting unknowingly. None of our villagers came for this meeting. No one came to us and informed us regarding this meeting. No one took permission from us to conduct this meeting and no one came to our village to conduct such gathering. Can you establish any facility if you have purchased the land?. People have lost their eyesight. People are suffering a lot. We are affected, our generation was affected and our next generation should not be affected. The project can be set up elsewhere. We don't need it. We protest |

| | | |
|---|---|---|
| | | strongly.<br><br>He asked the public to raise hands, those who came from Melpakkam village. It is not correct to have such a large crowd without asking our permission. The proponent can go to their place and start a factory. It is explained in the presentation that there are 10 villages around the project site. Please count how many people have come from those ten villages? As such Pregnant women, physically challenged in Melpakkam village are affected due to operation of the existing steel company and polluting the drinking water. If this common Bio-medical waste treatment facility comes, the people will be affected more. We don't want this company. If 150 kg of ash per day is disposed, how much environmental impact will it cause? Further, the black smoke emitted from the steel company causes health issues to the public So we don't want this company. |
| 2 | **Mr. M. Vanarajan, Melpaakam Village** | We will permit this land only to carryout agriculture activity. Already allowing the steel factory to operate has affected the nearby villages. Nothing else is needed. The nearby steel company has already caused lot of damage. We are not getting water to drink. The water is polluted. |

| | | |
|---|---|---|
| 3 | **Mr. Pandyan, Melpaakam Village** | No one in our village knows that this company proposed to be established here. The people here to attend this meeting came from other villages. Our villagers don't know that this company is proposed to be established. If we know about this project we would have not permitted. |
| 4 | **Mr.Thuyamani, Anumanthapuram** | It has been said that the news have been published in Dinakaran paper and in Indian Express paper. Do you know how many people here read those papers?<br><br>The proponent said in the project report, that how much pollution is to be generated. I don't know how they will treat and recirculate so many pollutant and dispose the same. They said that there are 10 villages in and around the project site. Will they not be polluted? Not sure where to dispose of solid waste to be generated? Not sure where to get water for its entire activity. Is the air not going to be polluted? Will groundwater be affected? Our town Anumanthapuram is the first to be affected due to this industry. If the waste water is released here, it will first go to the Anumanthapuram lake, then it will go to the Melpaakam Lake, then the next lake. Every lake will get polluted. How could so much ton of waste is treated and recirculate it. How could be possible. |

| | | |
|---|---|---|
| 5 | **Mr.Murthy,**<br>**Melpaakam Village** | The water is already polluted by the steel factory operating nearby. Before we used to harvest once in 6 months and now we are harvesting only once in a year as the water is available only for six months. Now not even a single season crop can be raised.<br><br>The unit should not dispose a single drop of water on their field. They said that they propose to utilise 150 kiloliters of water per day. Then where all the water will go? Already the existing steel company is taking water from the river and due to that the water supply has been affected. The proposed company will also take water from the river and which will affect the river. So, we don't allow this company to come up here. |
| 6 | **Mr. Sampath,Melpaakam Village** | Establishing this company will have benefit to our village, if there is no pollution and provide employment opportunities to our people. We don't require this industry if it will create problem to our area.<br><br>Even if the company comes, I request them to treat the waste water properly and should not discharge it in to any land or surface water. |
| 7 | **Mr. Sudagar,**<br>**President of Kaliyampoondi Panchayat** | People are afraid because of medical waste is going to be treated. The proponent shall explain in detail how this waste is proposed to be treated and disposed of. |

| | | |
|---|---|---|
| | | Kaliyampoondi is the adjacent village to this proposed project. As I am the president of this Kaliyamapoondi village, I have to explain to the people of this village that this will not cause any harm to Kaliyampoondi.<br><br>I like to inform them that if there is no harm form this unit, the factory can be established and operated. |
| **8** | **Mr. Arulraj Chairman, Rawthanallur Village** | We have already allowed a Steel Factory in our area the proposed project can be established if there is no issues from the unit. As informed by the Chairman of Kaliyampoondi Village Panchayat, the proponent should ensure that due to this project there shall be no negative impact on the people and allow this project for the development of the local community. |
| **9** | **Mr. Venkatesh N G O** | I am an Environmentalist. I appreciate of this project because the local people will get employment from this project. This project may require 25-30 employment. Waste transportation is involved, and hence local people /local vehicles shall be given priority. Green Belt cover is mentioned as 42% in the EIA Summary Report. Different colour coded bags shall be used for sorting the waste. Local Coordination committee may be formed and solution for local issues can be found. This is my opinion, and it is up to you to grant permission or not. |

| | | |
|---|---|---|
| 10 | **Mr. Manokaran,**<br>**District Head, Water Right Security Movement** | While I observed the events happened today, I am able to understand that people are afraid regarding the Bio Medical Waste, whether they will handle it in the right manner. Regarding this the District Administration and Pollution Control Board should clarify their doubts and fears.If this project is implemented there shall be employment opportunity for 50 persons. We can clear the public's fear/query about this project through the village panchayat also.<br>Our organization is engaged in water management activities. We have worked on Cheyyaru and Palar River by constructing check dams and thereby increased the water storage levels. This project shall increase employment opportunity for us and as the borders of Chennai Metropolitan is increasing, we too shall grow along with it.We need more industries which shall provide employment to local people. By educating people about the opportunities of industrialization, we can bring more industries and job opportunities for the people. |
| 11 | **Mr. G. Devdas, LIC Agent Rawathanallur village** | We shall allow this company by ensuring more job opportunities for the surrounding village people and also no environmental issues |

| | | |
|---|---|---|
| **12** | **Mr. M. Subramani**<br>**Ammaiyappanallur** | Job opportunity should be given for both men and women on equal rights there by ensuring gendered equality. Ensure to operate the facility without any impact on the environment. |

The public hearing meeting was concluded with thanks to the District Revenue Officer,Land Acquisition, National Highways, Kancheepuram District, Officials, Public and NGO's attended and also informed to the public that the proceedings (audio and video recording) of the meeting, written petitions along with the hard copy of the minutes of the meeting will be sent to the State Environment Impact Assessment Authority (SEIAA-TN), Chennai. The proponent has reported that the EIA will be revised on the query raised in this Public Hearing and will be submitted to the SEIAA-TN.

The list of participants, audio and video recording, representation received on stage during meeting in original with photographs of the Public hearing meeting are enclosed herewith.

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Kanchipuram District.**

**Spl. District Revenue Officer (L.A)**
**New Green Field Airport**
**Paranthur, Kanchipuram District.**

**காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், மேல்பாக்கம் கிராமம், புல எண். 58/1, 58/2, 59/1A (pt), 59/1B (pt)–ல், தி/ள்.S. குரோத் அலையன்சஸ் எல் எல் பி என்கின்ற நிறுவனத்தின் மூலம் அமையவுள்ள பொது மருத்துவ கழிவு சுத்திகரிப்பு நிலையத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 23.01.2024 அன்று காலை 10.30 மணியளவில் திட்ட அமைவிடத்தில் நடைபெற்ற பொது மக்கள் கருத்துக்கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்.**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | தி/ள். S. குரோத் அலையன்சஸ் எல் எல் பி – பொது மருத்துவ கழிவு சுத்திகரிப்பு நிலையம், |
| இடம் | திட்ட அமைவிடம்<br>புல எண். 58/1, 58/2, 59/1A (pt), 59/1B (pt),<br>மேல்பாக்கம் கிராமம், உத்திரமேரூர் வட்டம்,<br>காஞ்சிபுரம் மாவட்டம். |
| நாள் மற்றும் நேரம் | 23.01.2024 காலை 10.30 மணி |
| பங்குபெற்றோர் | 1. தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு), புதிய பசுமை வழி விமான நிலையம், பரந்தூர், காஞ்சிபுரம் மாவட்டம்.<br><br>2. திரு. கு. பிரகாஷ், எம்.டெக்., மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், திருப்பெரும்புதூர், காஞ்சிபுரம் மாவட்டம். |

மற்றும் பொதுமக்கள்

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பெரும்புதூர் அவர்கள், இக்கருத்து கேட்பு கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்த வருகை தந்துள்ள மாவட்ட வருவாய் அலுவலர்,(நி.எ), காஞ்சிபுரம் மாவட்டம், அவர்களையும் மற்றும் ஏனைய அரசுத்துறை அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஆகியோர் அனைவரையும் வரவேற்றார். காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், மேல்பாக்கம் கிராமம், புல எண். 58/1, 58/2, 59/1A (pt), 59/1B (pt)–ல், தி/ள்.S. குரோத் அலையன்சஸ் எல் எல் பி, என்கின்ற நிறுவனம் மூலம் அமையவுள்ள பொது மருத்துவ கழிவு சுத்திகரிப்பு நிலையம் சுற்றுச்சூழல் அனுமதி வேண்டி மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு விண்ணப்பித்து TOR (Terms of Reference) என்கின்ற வரையறைகளை பெற்றுள்ளது. சுற்றுச்சூழல் மதிப்பீட்டு குழுவின் 06.06.2024 தேதியிட்ட குறிப்பு விதிமுறை கடிதத்தின் அடிப்படையில், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரித்து பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்த கேட்டுக்கொண்டதின் அடிப்படையில் அதற்கான அறிவிப்பு 13.12.2023 அன்று **"தினகரன்"** என்கின்ற தமிழ் நாளிதழிலும் மற்றும் **"தி நியூ இந்நியன் எக்ஸ்பிரஸ்"** என்ற ஆங்கில நாளிதழிலும் வெளியிடப்பட்டு இன்று 23.01.2024 இல் இப்பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை எடுத்துரைத்தார்.

இதனையடுத்து இத்திட்டம் தொடர்பான விரிவான விளக்கங்கள் மற்றும் அதனை சார்ந்த சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு குறித்து இத்திட்ட ஆலோசகர் திரு.M. **விவேக்** , பொதுமக்களுக்கு எடுத்துரைத்தார்.

அதன் பின்பு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், பொதுமக்களிடம் இந்த திட்டத்தைப் பற்றி தங்களது கருத்துக்கள் கேள்விகள், விளக்கங்கள் ஏதும் தேவையிருப்பின் அமைதியான முறையில் தங்களது பெயரையும் ஊரையும் குறிப்பிட்டு தெரியப்படுத்தலாம் என குறிப்பிட்டார். மேலும் அவர் கூறுகையில் தாங்கள் கூறுகின்ற அனைத்து கருத்துக்களும் ஒலி மற்றும் ஒளி பதிவு செய்யப்படும் எனவும், எழுத்துப்பூர்வமாகவும் தங்களது கருத்துக்களை மனுவாகவும் கொடுக்கலாம் என கூறினார். இதை தொடர்ந்து கருத்துக் கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்கள் தங்களது கருத்துக்களை பின்வருமாறு தெரிவித்தார்கள்.

<u>பொதுமக்களின் கருத்து மற்றும் கோரிக்கைகள்</u>

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி | கருத்து மற்றும் கோரிக்கைகள் |
|---|---|---|
| 1 | **திரு. பாலமுருகன், மேல்பாக்கம் கிராமம்** | மேல்பாக்கம் கிராமத்தில் தண்டரா போடப்படவில்லை. நாங்கள் தெரியாமல் தான் வந்தோம். எங்கள் கிராம மக்கள் யாரும் வரவில்லை. எங்களிடத்தில் யாரும் வந்து சொல்லவில்லை. எங்களிடம் யாரும் அனுமதி வாங்கவில்லை. மக்கள் எல்லோரும் வரவேண்டும். எங்கள் ஊரில் வந்து கூட்டம் போடுவதற்கு உங்களில் யார் வந்தது. இடம் வாங்கி விட்டால் ஆரம்பிக்கலாமா. ஏற்கனவே பிரச்சினைகள் நிறைய உள்ளது. மக்களுக்கு கண் பார்வை போய்விட்டது. மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டு உள்ளார்கள். எங்கள் சந்ததி பாதிக்கப்பட்டுள்ளது. பின்வரும் சந்ததி பாதிக்கப்படாமல் வாழ வேண்டும். நீங்கள் வேறு இடத்தில் இதை அமைத்துக்கொள்ளுங்கள். எங்களுக்கு இது தேவை இல்லை. கடுமையாக எதிர்ப்பு தெரிவிக்கிறோம். மேல்பாக்கம் கிராம மக்கள் எவ்வளவு பேர் வந்துள்ளீர்கள் கை தூக்குங்கள். மொத்தம் எத்தனை பேர் உள்ளீர்கள். எங்களிடம் அனுமதி கேட்காமல் இவ்வளவு பெரிய கூட்டம் போட்டது தவறு. நீங்கள் உங்களது இடத்தில் சென்று தொழிற்சாலை ஆரம்பித்து கொள்ளுங்கள். இத்திட்ட அமைவிடத்தை சுற்றி 10 ஊர் இருப்பதாக கூறியுள்ளீர்கள். அந்த பத்து ஊரில் இருந்து எவ்வளவு பேர் வந்துள்ளார்கள் என்று காட்டுங்கள். மேல்பாக்கம் கிராமத்தில் உள்ள கர்ப்பிணிகள், மாற்றுதிறனாளிகள் இங்கு உள்ள இந்த ஸ்டீல் கம்பெனியால் பாதிப்படைகிறார்கள். ஏற்கனவே இயங்கி கொண்டு இருக்கும் இந்த தொழிற்சாலையால் |

| | | |
|---|---|---|
| | | குடிநீர் மாசடைகிறது. மேலும் மருத்துவ கழிவு சுத்திகரிப்பு தொழிற்சாலை வந்தால் மக்களுக்கு பாதிப்பு அதிகமாகதான் ஏற்படும். எங்களுக்கு இந்த நிறுவனம் வேண்டாம். ஒரு நாளைக்கு 150 கிலோ சாம்பால் வெளியேறினால் எவ்வளவு பெரிய சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும். அது மட்டும் இல்லாமல் ஸ்டீல் கம்பெனியில் இருந்து வெளிவரும் கரும்புகையினால் பக்கத்திலுள்ள கிராம மக்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. இதனால் எங்களுக்கு இந்த நிறுவனம் வேண்டாம். |
| 2 | **திரு. M. வனராஜன், மேல்பாக்கம்** | விவசாயம் செய்வதென்றால் இந்த இடத்தை விடுகிறோம். மற்ற எதுவும் தேவையில்லை. அருகில் உள்ள இந்த ஸ்டீல் கம்பெனிக்கு விட்டதே பெரிய பாதிப்பு ஆகிவிட்டது. குடிப்பதற்கு தண்ணீர் இல்லை. தண்ணீர் சுத்தமாக பாதிப்படைந்துள்ளது, |
| 3 | **திரு. பாண்டியன், மேல்பாக்கம்** | இந்த கம்பெனி வருவது எங்கள் ஊர் மக்களுக்கு யாருக்கும் தெரியாது. வெளியூரிலிருந்து வந்துள்ளார்கள். இந்த கம்பெனி வருவது எங்கள் ஊர்மக்களுக்கு தெரியாது தெரிந்திருந்தால் அனுமதி கொடுக்க மாட்டோம். |
| 4 | **திரு. தூயமணி, அனுமந்தபுரம்** | நீங்கள் தினகரன் பேப்பர் இந்தியன் எக்ஸ்பிரஸ் பேப்பரில் விளம்பரம் செய்திருப்பதாக கூறினீர்கள். இங்கு இருப்பவர்களில் எத்தனை பேர் இந்த பேப்பர் படிக்கிறார்கள் என்று தெரியுமா?. இவர்கள் திட்ட அறிக்கையிலேயே கூறுகிறார்கள் எவ்வளவு நச்சு வருகிறது என்று. இவ்வளவு நச்சுகளை ரீசர்குலேஷன் செய்து அந்த தண்ணீரை எங்கே விடுவார்கள் என்று தெரியவில்லை. பக்கத்தில் 10 கிராமங்கள் உள்ளதாக கூறியுள்ளார்கள் அவைகள் மாசுபடாதா? திடக்கழிவு கழிவு சுத்தம் செய்துவிட்டு இந்த கழிவை எங்கே விடுவார்கள் என்று தெரியவில்லை? தண்ணீர் எங்கிருந்து எடுப்பார்கள் என்று தெரியவில்லை? காற்று மாசுபடாதா? நிலத்தடி நீர் பாதிக்கப்படாதா? முதலில் பாதிக்கப்படுவதே எங்கள் ஊர் அனுமந்தபுரம் தான். அதற்குப் பிறகுதான் மேல்பாக்கம் உள்ளது. இங்கு தண்ணீர் விட்டால் முதலில் அனுமந்தபுரம் ஏரிக்கு தான் செல்லும், அதற்குப் பிறகு மேல்பாக்கம் ஏரிக்கு செல்லும் நச்சுக்கழிவு தண்ணீர் ஊற்றினால் முதலில் மேல் பாக்கம் செல்லும் அதுக்கு பிறகு அடுத்த ஏரி அதன்பின் அனுமந்தபுரம் ஏரி செல்லும் |

| | | |
|---|---|---|
| | | எல்லாம் மாசடைந்து போகும். நீங்களும் இவ்வளவு டன் கழிவு வருகிறது என்றும் அதை ரிசர்குலேஷன் செய்வதாக கூறுகின்றீர்கள் இது எப்படி முடியும். |
| 5 | திரு. மூர்த்தி, மேல்பாக்கம் | ஏற்கனவே அருகில் இயக்கும் ஸ்டீல் பேக்டரியால் இங்கு தண்ணீர் மாசுபட்டுள்ளது. இரண்டு போகம் விளையும், ஆறு மாதங்கள் தண்ணீர் பாயும். இப்பொழுது ஒரே ஒரு பயிர் கூட விளைவிக்க முடியாது. ஒரு போகம் கூட விளைவிக்க முடியவில்லை. ஒரு சொட்டு தண்ணீர் கூட வயலுக்கு விட முடியவில்லை. இவர்களும் ஒரு நாளைக்கு 150 கிலோ லிட்டர் தண்ணீர் விடுவதாக கூறியுள்ளார்கள். அப்போது தண்ணீர் எங்கே போகும். வருடக்கணக்கில் கணக்கிட்டு பாருங்கள். ஏற்கனவே இந்த ஸ்டீல் கம்பெனிக்கு ஆற்றில் இருந்து தண்ணீர் எடுத்து நீர் ஆதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. இவர்களும் அங்கிருந்து தான் தண்ணீர் எடுப்பார்கள். தண்ணீர் ஆதாரம் பாதிக்கப்படும், அதனால் இந்த கம்பெனி வேண்டாம். |
| 6 | திரு. சம்பத், மேல்பாக்கம் | இந்த கம்பெனி வருவதால் எங்கள் கிராமத்திற்கு நன்மை ஏற்படும். அதனால் அதைப் பற்றிய விவரங்களை கூறி, பாதிப்பு ஏற்படாமல் இருந்தால் எங்கள் மக்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்து அமைத்துக் கொள்ளலாம். பாதிப்பு ஏற்படும் என்றால் இது எங்களுக்கு தேவையில்லை. கம்பெனி வந்தாலும், கழிவுநீர் முறையாக சுத்திகரிப்பு செய்து வெளியேற்றி எதிலும் கலக்காமல் பாதிக்காமல் இயக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். |
| 7 | திரு. சுதாகர்,<br>கலியாம்பூண்டி ஊராட்சி மன்ற தலைவர் | மருத்துவக் கழிவு வெளியேற்றம் என்பதால் மக்கள் பயப்படுகிறார்கள். இந்த கழிவு எப்படி பயன்படுத்தி எப்படி வெளியேற்றுகிறார்கள் என்பதை விளக்க வேண்டும். எங்கள் ஊருக்கு அருகில் உள்ள கலியாம்பூண்டி இதனால் எந்த தீங்கும் ஏற்படாது என்பதை மக்களுக்கு விளக்கி எந்த வித தீங்கும் ஏற்படாமல் இருந்தால் தொழிற்சாலை இயக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். |
| 8 | திரு. அருள்ராஜ் தலைவர், ராவுத்த நல்லூர் | அருகில் உள்ள ஸ்டீல் கம்பெனி இல்லை என்றால் இது குறித்து நாம் பேச முடியாது. ஆனால் இந்த கம்பெனி அமைப்பதால் யாருக்கும் பாதிப்பு ஏற்படாமல், கலியாம்பூண்டி தலைவர் கூறியது போல |

| | | |
|---|---|---|
| | | சுற்றுச்சூழலை பாதிக்காமல், மக்களுக்கு பாதிப்பு இல்லாமல் கம்பெனியை நிறுவலாம் என்பதின் அடிப்படையில் அனுமதி வழங்கலாம். |
| 9 | திரு. வெங்கடேஷ் என் ஜி ஓ: (இவர் ஆங்கிலத்தில் பேசினார்) | இந்த ப்ராஜெக்ட்டில் இப்பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வேண்டும், மேலும் பசுமை போர்வையை 42 பகுதி சதவீதத்திலிருந்து உயர்த்தி நான்குபக்கத்திலும் மரங்களை வளர்த்து சுற்றுச்சூழல் ஏதும் பாதிக்காமல் நடத்த வேண்டும். மேலும் மருத்துவ திடக்கழிவுகளை உரிய வண்ணப் பைகளில் முறையாக கையாள வேண்டும். இந்த திட்டம் வருவதால் மக்களுக்கு பயன் ஏற்படும். சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு இல்லாமல் நிறுவனத்தை நிறுவிட அனுமதி வழங்கவும். மேலும் இப்பகுதி மக்களுக்கு குறைகள் ஏதும் ஏற்பட்டால் அதை உள்ளூர் குழு ஒன்றை அமைத்து அதன் மூலம் தீர்வு காணலாம். இப்பகுதி மக்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் இருந்தால் இந்த நிறுவனத்தை அமைத்துக்கொள்ளலாம். |
| 10 | திரு. மனோகரன்,<br>மாவட்ட தலைவர், நீர் உரிமை பாதுகாப்பு இயக்கம் | இந்த நிகழ்வுகளைப் பார்க்கும்போது மருத்துவக் கழிவுகள் குறித்து ஒரு அச்சம் மக்களிடையே காணப்படுகிறது. மருத்துவ கழிவுகளை முறையாக கையாளுவார்களா என்ற ஒரு அச்சம் நிலவுகிறது. இது குறித்து மாவட்ட நிர்வாகம் மற்றும் மாசு கட்டுப்பாடு வாரியம் உரிய தெளிவுரை வழங்க வேண்டும். இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது ஒரு 50 நபர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படும். இங்கு உள்ள ஊராட்சி அமைப்புகள் மூலம் இத்திட்டம் பற்றி மக்களுக்கு தெளிவுபடுத்தலாம். எங்களது அமைப்பு மூலம் நீர் மேலாண்மை செய்து வருகிறோம். செய்யாறு, பாலாறு மற்றும் சில நதிகளில் நீர் ஆதாரத்தை உயர்த்தி உள்ளோம். இந்த நிறுவனம் வரும் போது வேலைவாய்ப்பு பெருகும். நாம் சென்னை மாநகரத்துடன் இணைந்தால் நமக்கு ஒரு மேம்பாடு ஏற்படுத்தும். இப்பகுதிக்கு இன்டஸ்ட்ரியல் டெவலப்மென்ட் வரவேண்டும். மக்களுக்கு வேலை வாய்ப்பு உண்டாக்க வேண்டும். மக்களை தெளிவு படுத்துவதன் மூலம் இதனை சாத்தியப்படுத்தலாம். |
| 11 | திரு. G. தேவதாஸ்,<br>எல்ஜசி முகவர், | இந்த நிறுவனம் வரும்போது சுற்றியுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதற்கும் எந்த விதமான |

| | | |
|---|---|---|
| | ராவுத்த நல்லூர் | பாதிப்பும் இல்லாமல் நடத்துவதற்கும் சம்மதிக்கிறோம |
| 12 | திரு. M. சுப்பிரமணி<br>அம்மையப்பநல்லூர் | இந்தப் பகுதி மக்களுக்கு ஆண் பெண் இருபாலருக்கும் சம விகிதத்தில் வேலை வாய்ப்பு கிடைப்பதற்கும், எந்த பாதிப்பும் இல்லாமல் தொழிற்சாலையை நிறுவி அமைக்க வேண்டும் |

இதையடுத்து பொதுமக்கள் எவரும் கருத்துக்கள் கூற முன்வராத பட்சத்தில் இப்பொதுமக்களின் கருத்து கேட்பு கூட்டத்தை முடிவுக்கு கொண்டுவரும் விதமாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்தி தந்த மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், ஏனைய அரசுதுறை அலுவலர்கள், பொதுமக்கள் மற்றும் சமுக ஆர்வலர்கள் அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொண்டு இந்த கருத்து கேட்பு கூட்டத்தில் பொதுமக்கள் பதிவு செய்த கருத்துக்கள் முழுமையாக ஒலி மற்றும் ஒளி பதிவு செய்யப்பட்டு மாநில சுற்றுச்சூழல், தாக்க மப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என்று கூறி கருத்துக் கேட்பு கூட்டத்தை நிறைவு செய்தார்.

இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்களின் பட்டியல் மற்றும் கோரிக்கையாக பெறப்பட்ட புகார் மனுக்கள் இத்துடன் இணைப்பாக இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு),
புதிய பசுமை வழி விமான நிலையம், பரந்தூர்,
காஞ்சிபுரம் மாவட்டம்.